# க. பொ. த (சாதாரண தர)ப் பரீட்சை - 2020
# 16 - இஸ்லாம்
# புள்ளி வழங்கும் திட்டம்

## இஸ்லாம் I

**1 ஆம் வினாத்தாளின் 40 வினாக்கள்**

1 x 40 = 40 புள்ளிகள்

## இஸ்லாம் II

**1 ஆம் வினா கட்டாயமானது**

ஒவ்வொரு பிரிவுக்கும் 2 புள்ளிகள் விதம் பத்து வினாக்கள் — 2 x 10 = 20 புள்ளிகள்

**2 முதல் 7 ஆம் வினாக்கள்**

தெரிவு செய்யப்பட்ட 4 வினாக்களுக்கு — 4 x 10 = 40 புள்ளிகள்

மொத்தம் 100 புள்ளிகள்

**பகுதி வினாக்களுக்கான புள்ளிகள்**

(2 ஆம் வினாவில் இருந்து 6 ஆம் வினா வரை)

| | | |
|---|---|---|
| (i) | பகுதி | 02 புள்ளிகள் |
| (ii) | பகுதி | 03 புள்ளிகள் |
| (iii) | பகுதி | 05 புள்ளிகள் |
| | | 10 புள்ளிகள் |

Department of Examinations - Sri Lanka

**07 வினாவில் தெரிவு செய்த இரு பகுதிகளுக்கு**

| | | |
|---|---|---|
| (i) | பகுதி | 05 புள்ளிகள் |
| (ii) | பகுதி | 05 புள்ளிகள் |
| | | 10 புள்ளிகள் |

**வினாத்தாள் I மொத்தம் 40 புள்ளிகள்**

**வினாத்தாள் II மொத்தம் 60 புள்ளிகள்**

**100 புள்ளிகள்**



Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

# க.பொ.த (சா.தர)ப் பரீட்சை - 2020

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடலுக்கான பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. சகல உதவிப் பரீட்சகர்களும் விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற மைப் பேனாவை பயன்படுத்தவும்.
2. பிரதம பரீட்சகர் ஊதாநிற மைப்பேனாவைப் பயன்படுத்த வேண்டும்.
3. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
4. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, ஒப்பம் இடவும்.
5. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பின்னங்களாக பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் ☐ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.
6. எண்கணித பரிசோதகர் புள்ளிகளைச் சரிபார்ப்பதற்கு நீல அல்லது கறுப்பு நிறமைப் பேனாவைப் பயன்படுத்த வேண்டும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) ..........................................................................
.............................................................................. ✓ △ $\frac{4}{5}$
..............................................................................

(ii) ..........................................................................
.............................................................................. ✓ △ $\frac{3}{5}$
..............................................................................

(iii) ..........................................................................
.............................................................................. ✓ △ $\frac{3}{5}$
..............................................................................

**மொத்தம்** ⟶ ☐ $\frac{10}{15}$

**பல்தேர்வு விடைத்தாள்**

**1. துளைத்தாள் தயாரித்தல்**

I. புள்ளி வழங்கும் திட்டத்தின் படி சரியான தெரிவைத் துளைத்தாளில் அடையாளமிடவும்.

II அவ்வாறு அடையாளமிடப்பட்ட இடத்தை வெட்டி நீக்கித் துளைத்தாளைத் தயாரிக்கவும்.

III துளைத்தாளை விடைகளின் மீது சரியாக வைத்துக்கொள்ளக்கூடியதாகச் சுட்டெண் அடைப்பையும் வெட்டி நீக்கவும். சரியான விடைகளின் எண்ணிக்கையைக் காட்டும் அடைப்பையும் வெட்டி நீக்கவும்.

IV சரியான, பிழையான விடைகளை குறிப்பிடக்கூடியதாக ஒவ்வொரு வரிசைக்கும் இறுதியில் வெற்று நிரையொன்றை வெட்டி ஏற்படுத்திக் கொள்ளவும்.

V **வெட்டிக்கொண்ட துளைத்தாளில் பிரதம பரீட்சகரிடம் கையொப்பம் பெற்று அங்கீகரித்துக் கொள்ளவும்.**


Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.

3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை × அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் எழுதவும். அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும். புள்ளி பரிவர்த்தனை செய்யும் சந்தர்ப்பங்களில் பரிவர்த்தனை செய்யப்பட்ட புள்ளியை உரிய கூட்டினுள் எழுதவும்.

**கட்டமைப்பு கட்டுரை மற்றும் கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். **பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.**
2. புள்ளிகளை குறிப்பிடும்போது ஓவலண்ட் கடதாசியின் வலது பக்க நிரலைப் பயன்படுத்தவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக **2 இலக்கங்களில் பதியவும்.** வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

✶ **புள்ளிப்பட்டியல் தயாரித்தல்**

I. ஒரு வினாப்பத்திரம் மாத்திரம் உள்ள பாடங்கள் தவிர ஏனைய சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது.

II. ஒவ்வொரு வினாப்பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியான புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும்.

III. வினாப்பத்திரம் I இற்கான புள்ளி புள்ளிப்பட்டியலில் "**Total Marks**" என்ற நிரலில் **பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும்.**

IV. வினாப்பத்திரம் II இற்கான புள்ளிப் பட்டியலை தயார் செய்யும்போது பகுதிப் புள்ளிகளைப் பதிவதோடு வினாப்பத்திரம் II இன் இறுதிப் புள்ளிகளை புள்ளிப் பட்டியலில் "**Total Marks**" என்ற நிரலில் பதியவும்.

V. 43 சித்திரப் பாடத்திற்குரிய I, II, மற்றும் III ஆம் வினாப்பத்திரங்களுக்குரிய புள்ளிகளை தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதிந்து **எழுத்திலும் எழுதுதல் வேண்டும்.**

V. 21 – சிங்களமொழியும் இலக்கியமும், 22 – தமிழ்மொழியும் இலக்கியமும் ஆகிய இரு பாடங்களும் வினாப்பத்திரம் I இற்குரிய புள்ளி புள்ளிப்பட்டியலில் பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும். வினாப்பத்திரம் II, III இற்கான பகுதிப்புள்ளிகளை உள்ளடக்கி அவ் வினாப்பத்திரத்தின் மொத்தப் புள்ளிகளை, புள்ளிப்பட்டியலில் பதிய வேண்டும்.

**முக்கிய குறிப்பு :**

I. சகல சந்தர்ப்பங்களிலும் ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் உரிய முழுப்புள்ளியானது முழுத்தானத்தில் புள்ளி பட்டியலில் பதியப்படுதல் வேண்டும். எந்தவிதமான காரணங்களிற்காகவும் வினாப்பத்திரத்தின் இறுதிப்புள்ளியானது தசம தானங்களில் பதியப்படலாகாது.

II. புள்ளிப் பட்டியலின் சகல பக்கங்களிலும் புள்ளிகளைப் பதிந்து உதவிப் பரீட்சகர், புள்ளிகளை சரிபார்த்த உதவிப் பரீட்சகர், மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் எண்கணித பரீட்சகர் மற்றும் பிரதம பரீட்சகர் தமது குறியீட்டு இலக்கத்தை எழுதி கையொப்பமிட்டு உறுதிப்படுத்துவது கட்டாயமாகும்.

○○○



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

Department of Examinations - Sri Lanka

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**16 T I,II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2020
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2020
General Certificate of Education (Ord. Level) Examination, 2020

ඉස්ලාම් I, II
இஸ்லாம் I, II
Islam I, II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

## இஸ்லாம் I

**கவனிக்க :**

(i) **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.

(ii) **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.

(iii) **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.**

(iv) அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

**1.** இஸ்லாத்தில் நம்பிக்கையை விளக்கும் கலை எவ்வாறு அழைக்கப்படும்?
(1) இல்முல் அகீதா (2) இல்முத் தஸவ்வுப்
(3) உஸூலுல் ஹதீஸ் (4) உஸூலுல் பிக்ஹ்

**2.** "உங்கள் முன்னோர்கள் மீது நோன்பு கடமையாக்கப்பட்டது போன்று உங்கள் மீதும் நோன்பு கடமையாக்கப்பட்டுள்ளது" என்பது
(1) ஒரு ஹதீஸ் ஆகும். (2) உமர் (ரழி) அவர்களின் கூற்றாகும்.
(3) இப்னு மஸ்ஊத் (ரழி) அவர்களின் கூற்றாகும். (4) அல் - குர்ஆன் வசனமாகும்.

**3.** குற்றம் நிகழ்ந்துவிடும் என்ற அச்சத்தினால் குற்றம் என சந்தேகிக்கின்ற எவற்றையும் தவிர்த்து கொள்வதைக் குறிக்கப் பயன்படும் சொல் எது?
(1) இக்லாஸ் (2) வரஉ (3) தவ்பா (4) கவ்ப்

**4.** நபி மூஸா (அலை) அவர்களின் எதிரியாக இருந்து நைல் நதியைக் கடக்கும்போது அதில் மூழ்கடிக்கப்பட்ட மன்னன் யார்?
(1) ஹாமான் (2) காறூன் (3) நும்ரூத் (4) பிர்அவ்ன்

**5.** 'கருணையுள்ளவன்' என்ற கருத்தைத் தரும் அல்லாஹ்வின் திருநாமம் யாது?
(1) அர் - ரஹீம் (2) அர் - ரஹ்மான்
(3) அல் - காலிக் (4) அர் - ராஸிக்

**6.** பின்வருவனவற்றுள் தொழுகையின் மூலம் மனிதன் அடையும் பயன்களுள் ஒன்றெ அல் - குர்ஆனில் குறிப்பிடப்படுவது எது?
(1) தொழுகை ஓர் உடற்பயிற்சியாகும்.
(2) தொழுகை சமத்துவத்தைப் போதிக்கின்றது.
(3) தொழுகை தீய செயல்களிலிருந்து தடுக்கின்றது.
(4) தொழுகை ஒற்றுமையை ஏற்படுத்துகின்றது.



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**7.** ஒருவர் ஒரு நற்செயலை 'அல்லாஹ்வுக்காக' எனும் தூய எண்ணத்தில் செய்வதோடு, மக்கள் தன்னைப் புகழ வேண்டும் எனவும் எதிர்பார்க்கிறார். அச்செயல்
(1) அல்லாஹ்வுக்கு இணைவைத்தலாகும். (2) நற்செயலாகும்.
(3) வரவேற்கத்தக்கதாகும். (4) அனுமதிக்கப்பட்டதாகும்.

**8.** முதல் வஹியின்போது ஏற்பட்ட அதிர்ச்சியால் ஹிராக் குகையிலிருந்து வீட்டுக்கு வந்த நபி (ஸல்) அவர்கள், அங்கு நடைபெற்ற சம்பவத்தை முதன் முதலில் யாரிடம் கூறினார்கள்?
(1) அபூபக்கர் (ரழி) (2) கதீஜா (ரழி) (3) ஆயிஷா (ரழி) (4) சவ்தா (ரழி)

**9.** மஸ்ஜித் கட்டட அம்சங்களுடன் **தொடர்பற்ற** சொல் எது?
(1) மிஹ்றாப் (2) மிம்பர் (3) மினாரா (4) மக்பரா

**10.** இலங்கை முஸ்லிம் பெண்களின் கல்வி மேம்பாட்டுக்கென கல்விக் கூடங்களை முதன் முதலில் நிறுவியவர் யார்?
(1) ரீ. பி. ஜாயா (2) வாப்பிச்சி மரைக்கார்
(3) எம். சி. சித்திலெப்பை (4) பதியுதீன் மஹ்மூத்

**11.** பின்வரும் பதங்களைக் கருதுக.
A - தலாக் B - ஈஜாப் C - மஹர் D - கபூல்
E - லிஆன் F - லிஹார் G - குல்உ H - நபகா
மேற்குறித்தவற்றுள் விவாக விடுதலையுடன் தொடர்புடைய பதங்களைக் கொண்ட தொகுதி எது?
(1) A, B, C, D (2) A, E, F, G (3) B, C, D, E (4) B, F, G, H

**12.** நபி (ஸல்) அவர்களிடம் காணப்பட்ட நம்பகத்தன்மை காரணமாக குறைஷிகள் அவருக்குச் சூட்டிய சிறப்புப் பெயர் என்ன?
(1) அல் - அமீன் (2) அஸ் - ஸித்தீக்
(3) அல் - பாரூக் (4) அர் - ரசூல்

**13.** ஹஜ் கிரியைகளை நிறைவேற்றும் முறைகளுள் 'அல் - கிரான்' என அழைக்கப்படுவது யாது?
(1) ஹஜ்ஜையும் உம்ராவையும் சேர்த்து நிறைவேற்றல்
(2) ஹஜ்ஜை மாத்திரம் நிறைவேற்றல்
(3) உம்ராவை மாத்திரம் நிறைவேற்றல்
(4) ஹஜ்ஜுக்குச் செல்ல நிய்யத் வைத்தல்

**14.** மனித உள்ளங்களின் வகைகளுள் 'தன்னையே நொந்து கொள்ளும் உள்ளம்' என்பது
(1) நப்ஸுல் முத்மஇன்னா ஆகும். (2) நப்ஸுல் அம்மாரா ஆகும்.
(3) நப்ஸுல் மர்ழிய்யா ஆகும். (4) நப்ஸுல் லவ்வாமா ஆகும்.

**15.** பின்வரும் அட்டவணையில் சில நபிமார்களின் பெயர்களும் அவர்களுக்கு வஹி அருளப்பட்ட வழிமுறைகளும் தரப்பட்டுள்ளன.

| நபிமார்களின் பெயர்கள் | வஹி அருளப்பட்ட முறைகள் |
|---|---|
| (1) இப்ராஹிம் (அலை) | A - அசரீரி |
| (2) மூஸா (அலை) | B - சமிக்ஞை |
| (3) ஸகரிய்யா (அலை) | C - கனவு |

மேற்குறித்த நபிமார்களின் பெயர்களுக்கேற்ப முறையே அவர்களுக்கு வஹி அருளப்பட்ட முறைகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள தெரிவு யாது?
(1) A B C (2) A C B (3) C A B (4) C B A

Department of Examinations - Sri Lanka


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**16.** பின்வருவனவற்றுள் ஒன்றுக்கொன்று எதிர் கருத்துக்களைத் தரும் சொற்சோடி எது?
(1) அல் - லாத், அல் - மனாத் (2) யவ்முல் ஹஷ்ர், யவ்முல் ப∴ஸ்
(3) மஜன்னா, துல் மஜாஸ் (4) அல் - ஜன்னா, அந் - நார்

**17.** கலீபா அபூபக்கர் (ரழி) அவர்கள் மேற்கொண்ட பணி யாது?
(1) ஹிஜ்ரி ஆண்டை அறிமுகப்படுத்தியமை
(2) அல் - குர்ஆனை நூலுருப்படுத்தியமை
(3) அரச இலாகாக்களை அமைத்தமை
(4) எகிப்தை வெற்றி கொண்டமை

**18.** ஒருவரின் மூலதனத்தையும் மற்றொருவரின் உழைப்பையும் கொண்டு மேற்கொள்ளப்படும் வியாபாரம் இஸ்லாத்தில் எப்பெயர் கொண்டு அழைக்கப்படுகிறது?
(1) முழாறபா (2) முஸாரஆ (3) முஷாரகா (4) முறாபஹா

**19.** நபி (ஸல்) அவர்களது காலத்தில் யெமன் தேசத்திற்கு கவர்னராக அனுப்பப்பட்ட ஸஹாபி யார்?
(1) அப்துல்லாஹ் இப்னு ரவாஹா (ரழி)
(2) முஆத் இப்னு ஜபல் (ரழி)
(3) ஸ∴து இப்னு முஆத் (ரழி)
(4) முஆவியா இப்னு அபூ சுப்யான் (ரழி)

**20.** அன்வர் விளையாட்டு மைதானத்திலிருந்து வரும் வழியில் மஸ்ஜிதுக்குச் சென்று ஜமாஅத் தொழுகை ஒன்றின் இரண்டாம் ரகஅத்தில் இணைந்து, ஒவ்வொரு ரகஅத்திலும் அத்தஹிய்யாத்தில் அமர்கிறார். அவர் இணைந்துகொண்ட தொழுகை எது?
(1) ளுஹர் (2) அஸர் (3) ம∴ரிப் (4) இஷா

**21.** ஒருவர் மீது குளிப்பு கடமையாகும் சந்தர்ப்பம் எது?
(1) ஜனாஸாவைக் குளிப்பாட்டிய பின்னர்
(2) உஷ்ணம் கடுமையாக இருக்கும்போது
(3) பெருந்தொடக்கு ஏற்பட்டதன் பின்னர்
(4) பிரயாணத்திலிருந்து வீடு திரும்பிய பின்னர்

**22.** 'ரப்புன் நாஸ்' என்பதன் பொருள் யாது?
(1) மனிதர்களின் இரட்சகன் (2) அகிலத்திற்கு அருட்கொடையாளன்
(3) பிரபஞ்சத்தின் கடவுள் (4) மறுமை நாளின் அதிபதி

**23.** பின்வருவனவற்றுள் 'பஸ்கு' பற்றிய சரியான கூற்று எது?
(1) கணவன் மூலம் நிகழ்வதாகும்.
(2) மனைவியை தாய்க்கு ஒப்பாக்குவதாகும்.
(3) கணவனுக்கு நன்கொடை ஏதேனும் வழங்கி மனைவி பிரிவதாகும்.
(4) கணவனும் மனைவியும் மஹ்ரமிகள் எனத் தெரியவருவதாகும்.

**24.** பின்வரும் அட்டவணையில் **அ** நிரலில் சில கலைச் சொற்களும் **ஆ** நிரலில் அவற்றின் விளக்கங்களும் தரப்பட்டுள்ளன.

| அ | ஆ |
|---|---|
| (1) ஷாஹித் | A - திருமணம் |
| (2) நிகாஹ் | B - திருமண ஒப்பந்தத்தின்போது சாட்சியாக இருப்பவர் |
| (3) வலி | C - மணமகன் வழங்கும் விருந்துபசாரம் |
| (4) வலீமா | D - மணப்பெண்ணை மணமகனுக்குக் கையளிக்க உரித்துடையவர் |

மேலே **அ** நிரலுக்குப் பொருத்தமான விதத்தில் முறையே **ஆ** நிரல் ஒழுங்குபடுத்தப்படும்போது சரியாக அமையும் தெரிவு யாது?
(1) A B C D (2) B A D C (3) C D B A (4) D B A C


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**25.** நபி (ஸல்) அவர்கள் தனது இறுதி ரமழானில் ஜிப்ரீல் (அலை) அவர்களிடம் அல்-குர்ஆன் முழுவதையும் ஓதிக்காண்பித்தபோது அவர்களுடன் கூட இருந்த ஸஹாபி யார்?
(1) உமர் (ரழி)
(2) உஸ்மான் (ரழி)
(3) இப்னு அப்பாஸ் (ரழி)
(4) ஸைத் இப்னு ஸாபித் (ரழி)

**26.** கருத்து அல்லாஹ்வுடையதும் வார்த்தைப் பிரயோகம் நபி (ஸல்) அவர்களுடையதும் என அறியப்படுவது
(1) ஹதீஸுல் குத்ஸி ஆகும்.
(2) ஹதீஸ் நபவி ஆகும்.
(3) அல் - ஹபர் ஆகும்.
(4) அல் - அஸர் ஆகும்.

**27.** பின்வருவனவற்றுள் எழுத்து வடிவிலும் ஒலி வடிவிலும் பாதுகாக்கப்பட்டு வந்த மூலாதாரம் எது?
(1) அஸ் - ஸுன்னா
(2) அல் - குர்ஆன்
(3) அல் - இஜ்மா
(4) அல் - கியாஸ்

**28.** நபி (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் செல்லும் வழியில் தங்கிச் சென்ற இடம் எது?
(1) தௌர் குகை (2) ஜபலுர் ரஹ்மா (3) ஹிராக் குகை (4) ஜபலுன் நூர்

**29.** நபி (ஸல்) அவர்களின் ஹதீஸ்களை நூலுருப்படுத்தும் முயற்சி எந்த ஆட்சிக் காலத்தில் முதலில் ஆரம்பிக்கப்பட்டது?
(1) குலபாஉர்ராஷிதூன் காலத்திலாகும்.
(2) உமையாக்கள் காலத்திலாகும்.
(3) அப்பாஸியாக்கள் காலத்திலாகும்.
(4) உதுமானியர் காலத்திலாகும்.

**30.** ஒரு முஜ்தஹித் பெற்றிருக்க வேண்டிய தகைமைகள் பற்றிய **பிழையான** கூற்று எது?
(1) அல் - குர்ஆன் மற்றும் அஸ் - ஸுன்னா பற்றிய ஆழமான அறிவு
(2) அறபு மொழியில் பாண்டித்தியம்
(3) மத்திய காலத்தில் முஸ்லிம்களிடம் வளர்ச்சியடைந்திருந்த கலைகள் பற்றிய அறிவு
(4) முன்னைய முஜ்தஹித்களின் இஜ்திஹாத் பற்றிய விளக்கம்

**31.** பின்வருவனவற்றுள் தொழுகையின் ஓதல்களுள் கட்டாயமானது
(1) துஆஉல் இஸ்திப்தாஹ் ஆகும்.
(2) ஆயதுல் குர்ஸி ஆகும்.
(3) ஸூரதுல் பாதிஹா ஆகும்.
(4) ஸூரதுல் இக்லாஸ் ஆகும்.

**32.** 'தர்தீபுன் நுஸூல்' என்பதன் மூலம் கருதப்படுவது யாது?
(1) அல் - குர்ஆன் தொகுக்கப்பட்டுள்ள ஒழுங்குமுறை
(2) அல் - குர்ஆன் அருளப்பட்ட ஒழுங்குமுறை
(3) அல் - குர்ஆன் ஓதப்படுகின்ற ஒழுங்குமுறை
(4) அல் - குர்ஆன் வசனங்கள் அருளப்பட்டமைக்கான காரணங்கள்

**33.** குலபாஉர்ராஷிதூன் காலத்தில் ஷாம் தேசத்தின் கவர்னராகச் செயற்பட்ட முஆவியா (ரழி) அவர்களின் தலைமையில் கடற்படையொன்றை நிறுவிய கலீபா யார்?
(1) அபூபக்கர் (ரழி) (2) உமர் (ரழி) (3) உஸ்மான் (ரழி) (4) அலி (ரழி)

**34.** பின்வரும் அட்டவணையில் சில இமாம்களின் பெயர்களும் அவர்களின் சிறப்புப் பெயர்களும் தரப்பட்டுள்ளன.

| இமாம்களின் பெயர்கள் | சிறப்புப் பெயர்கள் |
|---|---|
| (1) இமாம் அபூ ஹனீபா (ரஹ்) | A - ஆலிமுல் குறைஷ் |
| (2) இமாம் மாலிக் (ரஹ்) | B - இமாமுல் அஃலம் |
| (3) இமாம் ஷாபிஈ (ரஹ்) | C - இமாமுல் மதீனா |

மேற்குறித்த இமாம்களின் பெயர்களுக்கேற்ப அவர்களின் சிறப்புப் பெயர்கள் சரியாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள தெரிவு யாது?
(1) A B C (2) A C B (3) B A C (4) B C A

Department of Examinations - Sri Lanka


Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

**35.** கோவிட் - 19 தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையில் தொடர்ச்சியாக ஐவேளை ஜமாஅத்திற்குச் செல்லும் வழக்கமுடைய சிலர் மஸ்ஜிதுக்குச் சென்று பயபக்தியுடன் தொழுது வந்தனர். இச்செயலை எவ்வாறு கருத முடியும்?

(1) இது இருபத்தேழு மடங்கு நன்மை தரும் செயலாகும்.
(2) இது பர்ளு கிபாயா ஆகும்.
(3) இது சட்டத்தை மீறும் குற்றச்செயலாகும்.
(4) நோய்த்தொற்று என்பது மார்க்கத்தில் இல்லாத ஒன்றாகும்.

**36.** ஒருவர் தனது பயன்பாட்டுக்காக மோட்டார் வாகனம் ஒன்றை இஸ்லாமிய வங்கி ஒன்றிடமிருந்து ஐந்து வருட வாடகை ஒப்பந்த அடிப்படையில் பெற்றுக்கொள்கின்றார். இவ் ஒப்பந்தத்தைக் குறிக்கும் பதம் யாது?

(1) ஸலம் (2) இஜாறா (3) ரஹ்ன் (4) வகாலா

**37.** 'பாபுர் ரய்யான்' எனும் வாயிலினூடாக சுவர்க்கம் நுழைவார் என ஹதீஸில் குறிப்பிடப்பட்டிருப்பவர் யார்?

(1) ரமழானில் தவறாது நோன்பு நோற்றவர் (2) ஐவேளை தவறாது தொழுது வந்தவர்
(3) முறையாக ஸகாத் வழங்கியவர் (4) ஹஜ்ஜை நிறைவேற்றியவர்

**38.** பின்வருவனவற்றுள் ஸகாத் பற்றிய சரியான கூற்று எது?

(1) வியாபாரப் பொருட்களில் ஸகாத் விதியாவதற்கு 'நிஸாப்' அவசியமில்லை.
(2) ரமழான் மாதத்தில் ஸகாத் வழங்குவது கடமையாகும்.
(3) முஅல்லபதுல் குலூப் எனும் குழுவினர் ஸகாத் பெறத் தகுதியுடையோராவர்.
(4) நாள்தோறும் தமது செலவுக்குப் போதுமான வருமானம் பெறுவோர் மீது ஸகாத் விதியாகும்.

**39.** பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.

A - அனைத்து வணக்க வழிபாடுகளிலும் மிகப் பிரதானமானது தொழுகையாகும்.
B - முஸ்லிம் ஆண்கள் சில சந்தர்ப்பங்களில் தொழுகையை விடுவதற்கு அனுமதிக்கப்படுகின்றனர்.
C - மிஃராஜின்போது நபி (ஸல்) அவர்களுக்கு தொழுகை சன்மானமாக வழங்கப்பட்டது.
D - ஜிப்ரீல் (அலை) அவர்கள் தொழுகையின் முறைகளை நபி (ஸல்) அவர்களுக்குக் கற்றுக் கொடுத்தார்கள்.

மேற்குறித்தவற்றுள் தொழுகை பற்றிய சரியான கூற்றுக்கள் யாவை?

(1) A யும் B யும் (2) B யும் C யும் (3) A, B, C ஆகியன (4) A, C, D ஆகியன

**40.** முஸ்லிம்களது மூதாதையர்களான அறேபியர் இலங்கையின் கரையோரங்களில் குடியமர்வதற்கு ஏதுவாய் அமைந்த காரணிகள் பற்றிய **பொருத்தமற்ற** கூற்றைத் தெரிவு செய்க.

(1) கிழக்கையும் மேற்கையும் இணைக்கும் வர்த்தகப் பாதையில் இலங்கை அமைந்திருந்தது.
(2) இலங்கை அறேபியத் தீபகற்பத்திற்கு மிக அண்மையில் அமைந்திருந்தது.
(3) வெளிநாட்டு வர்த்தகர்களின் தங்கு தளமாக இலங்கை அமைந்திருந்தது.
(4) இலங்கைத் துறைமுகங்களில் உணவு, குடிநீர் வசதிகள் என்பன காணப்பட்டன.

* *

Department of Examinations - Sri Lanka



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

රහස්‍යයි
அந்தரங்கமானது

## අ.පො.ස. (සා.පෙළ) විභාගය - 2020
## க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை - 2020

විෂය අංකය / பாட இலக்கம்: **16** විෂය / பாடம்: **இஸ்லாம்**

### I පත්‍රය - පිළිතුරු
### I பத்திரம் - விடைகள்

| ප්‍රශ්න අංකය **வினா இல.** | පිළිතුරෙහි අංකය **விடை இல.** | ප්‍රශ්න අංකය **வினா இல.** | පිළිතුරෙහි අංකය **விடை இல.** | ප්‍රශ්න අංකය **வினா இல.** | පිළිතුරෙහි අංකය **விடை இல.** | ප්‍රශ්න අංකය **வினா இல.** | පිළිතුරෙහි අංකය **விடை இல.** |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 1 | 11. | 2 | 21. | 3 | 31. | 3 |
| 02. | 4 | 12. | 1 | 22. | 1 | 32. | 2 |
| 03. | 2 | 13. | 1 | 23. | 4 | 33. | 3 |
| 04. | 4 | 14. | 4 | 24. | 2 | 34. | 4 |
| 05. | 1, 2 | 15. | 3 | 25. | 4 | 35. | 3 |
| 06. | 3 | 16. | 4 | 26. | 1 | 36. | 2 |
| 07. | 1 | 17. | 2 | 27. | 2 | 37. | 1 |
| 08. | 2 | 18. | 1 | 28. | 1 | 38. | 3 |
| 09. | 4 | 19. | 2 | 29. | 2 | 39. | 4 |
| 10. | 3 | 20. | 3 | 30. | 3 | 40. | 2 |

Department of Examinations - Sri Lanka

විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் } එක් පිළිතුරකට ලකුණු / ஒரு சரியான விடைக்கு **01** බැගින් / புள்ளி வீதம்

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் **01 × 40 = 40**

---

පහත නිදසුනෙහි දැක්වෙන පරිදි බහුවරණ උත්තරපත්‍රයේ අවසාන තීරුවේ ලකුණු ඇතුළත් කරන්න.
கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் உதாரணத்திற்கு அமைய பல்தேர்வு வினாக்களுக்குரிய புள்ளிகளை பல்தேர்வு வினாப்பத்திரத்தின் இறுதியில் பதிக.

නිවැරදි පිළිතුරු සංඛ්‍යාව / சரியான விடைகளின் தொகை: **25 / 40**

I පත්‍රයේ මුළු ලකුණු / பத்திரம் I இன் மொத்தப்புள்ளி: **25 / 40**


Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

16 | T | I,II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2020
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2020
General Certificate of Education (Ord. Level) Examination, 2020

ඉස්ලාම් I, II
இஸ்லாம் I, II
Islam I, II

## இஸ்லாம் II

※ **முதலாம்** வினாவையும் வேறு **நான்கு** வினாக்களையும் தெரிவுசெய்து, மொத்தமாக **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

※ முதலாம் வினாவின் விடைக்கு **20** புள்ளிகளும் ஏனைய ஒவ்வொரு வினாவின் விடைக்கும் **10** புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.

**1.** சுருக்கமான விடை எழுதுக.

(i) இஸ்லாமிய அகீதாவுக்கு அடிப்படையாக அமைந்துள்ள **இரண்டு** மூலாதாரங்களையும் குறிப்பிடுக.

(ii) இன்ஜீல், ஸபூர் ஆகிய வேதங்கள் அருளப்பட்ட **இரு** நபிமார்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

(iii) இஸ்லாமிய சட்ட அறிஞர்கள் வகைப்படுத்திய தண்ணீரின் பிரதான வகைகளுள் **இரண்டைக்** குறிப்பிட்டு, ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் உதாரணம் தருக.

(iv) இஜ்மாவின் வகைகளுள் **இரண்டை** அவற்றின் பொருளுடன் குறிப்பிடுக.

(v) ஸகாத் பெறத் தகுதியானோரில் பகீர், மிஸ்கீன் ஆகியோரை வேறுபடுத்திக் காட்டுக.

(vi) 'ஸீறா' என்ற பதத்தின் மூலம் புரிந்துகொள்ளப்படுவது யாது?

(vii) 'அகீகா', 'உழ்ஹியா' என்பவற்றை வரைவிலக்கணப்படுத்துக.

(viii) "ஒரு கத்ரிலிருந்து இன்னொரு கத்ரை நோக்கி நகர்ந்து செல்கிறேன்" எனக் குறிப்பிட்ட ஸஹாபி யார்?

(ix) மஸ்ஜிதுன் நபவியின் சிறப்புக்கள் **இரண்டு** தருக.

(x) இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல் (ரஹ்) அவர்களின் இஸ்லாமிய தீர்ப்புகள் தொடர்பான நூலின் பெயரைக் குறிப்பிடுக.

**2.** (i) 'மு.ஃ.ஜிஸாதுல் குர்ஆன்' என்றால் என்ன?

(ii) அல் - குர்ஆன், இஸ்லாமியச் சட்டத்தின் பிரதான மூலாதாரம் என்பதற்கான நியாயங்களுள் **மூன்றைக்** குறிப்பிடுக.

(iii) அல் - குர்ஆனைப் பாதுகாப்பதில் கலீபா உஸ்மான் (ரழி) அவர்களின் பங்களிப்புக்கள் **ஐந்தினைச்** சுருக்கமாக விளக்குக.

**3.** (i) 'இபாதத்' என்பதனை வரைவிலக்கணப்படுத்துக.

(ii) தொழுகையைத் தவற விடுபவனை நபி (ஸல்) அவர்கள் எச்சரித்துக் கூறிய **மூன்று** கருத்துக்களைத் தருக.

(iii) பர்ளான நோன்புக்கு இஸ்லாம் வழங்கியுள்ள முக்கியத்துவங்கள் **ஐந்தினைச்** சுருக்கமாக விளக்குக.

**4.** (i) ஸுஹ்த், ரஹ்பானியா என்பவற்றிற்கு இடையிலான வேறுபாட்டைக் குறிப்பிடுக.

(ii) தவ்பா ஏற்றுக்கொள்ளப்படத் தேவையான நிபந்தனைகள் **மூன்றைத்** தருக.

(iii) இஸ்லாம் போதிக்கும் நற்பண்புகள் **ஐந்தினைக்** குறிப்பிட்டு, அவை ஒவ்வொன்றுக்கும் நபி (ஸல்) அவர்களின் வாழ்விலிருந்து ஒவ்வோர் உதாரணம் தருக.



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**5.** (i) இஸ்லாமிய அடிப்படைகளைப் பேணி வியாபாரத்தில் ஈடுபடுவதனால் வாங்குவோனும் விற்போனும் அடையும் பொதுப் பயன்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(ii) இஸ்லாமியப் பொருளாதார முறையின் சிறப்பம்சங்கள் **மூன்றைச்** சுருக்கமாக விபரிக்குக.

(iii) வரலாற்றில் நபிமார்கள் கொண்டிருந்த தொழிற்திறன்கள் **ஐந்து** பற்றிச் சுருக்கமாக விளக்குக.

**6.** (i) இஸ்லாத்தின் பார்வையில் திருமணத்தின் நோக்கங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(ii) இளமைப்பருவத்தினை அர்த்தமுள்ளதாக மாற்றுவதற்கு இஸ்லாம் குறிப்பிடும் வழிகாட்டல்களுள் **மூன்றைத்** தருக.

(iii) வாழ்வில் நடுநிலை பேணல் (வஸதிய்யா) தொடர்பாக இஸ்லாம் முன்வைத்துள்ள **ஐந்து** வழிமுறைகளைத் தெளிவுபடுத்துக.

**7.** பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டிற்குச்** சிறுகுறிப்பு எழுதுக.

(i) முன்மாதிரியான இஸ்லாமியக் குடும்பத்தின் பண்புகள்

(ii) கலீபா என்ற வகையில் உமர் (ரழி) அவர்களின் பணிகள்

(iii) இலங்கையில் இஸ்லாம் அறிமுகமாகிய வரலாறு

(iv) நபி (ஸல்) அவர்களின் மக்கா கால இஸ்லாமிய அழைப்புப் பணி

Department of Examinations - Sri Lanka

❊ ❊ ❊



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

# க. பொ. த (சாதாரண தர)ப் பரீட்சை - 2020
## 16 - இஸ்லாம்

### கற்றற்பேறு

01. i. அகீதாவின் உள்ளடக்கத்தை விபரிப்பார்

ii. ரிஸாலத் ஹிதாயத் ஆகிய சொற்களுக்கான விளக்கத்தை விபரிப்பார்

iii. நீரின் வகைகளையும் நஜீஸை நீக்கும் முறையினையும் விளக்குவார்

iv. நவீன பிரச்சனைகளை தீர்க்க இஜ்மாவும் கியாஸும் தேவை என்பதை அறிந்து கூறுவார்

v. ஸகாத் பெற தகுதியானவர்களை அறிந்து எடுத்துக்கூறுவார்

vi. ஸீறாவை பல்வேறு கண்ணோட்டங்களில் எடுத்துக்கூறுவார்

vii. ஹஜ், உம்ரா கிரியைகளின் சிறப்பு பற்றி அறிந்து கூறுவார்

viii. கத்ரின் படி நிகழும் பிரபஞ்ச விதிகள் மத்தியில் தனது வாழ்வை சீரமைத்துக்கொள்வதற்காக தனக்கு இருக்கும் செயல் சுதந்திரத்தை பயன்படுத்துவார்

ix. மஸ்ஜிதுகள் முஸ்லிம்களது புனிதஸ்தலங்கள் என்பதை அறிந்து கூறுவார்.

x. பிக்ஹுத் துறையின் இமாம்களின் பணிகளை உணர்ந்து எடுத்துக்காட்டுவார்

02. i. அல்குர்ஆன் ஓர் அற்புதம் என்பதை பல்வேறு கோணங்களில் எடுத்துக்காட்டுவார்

ii. சட்ட மூலாதாரம் என்பதற்கான விளக்கத்தை முன்வைப்பார்

iii. உஸ்மான் (ரழி) அவர்கள் சமூகத்திற்கும் ஆட்சிக்கும் செய்த பங்களிப்புக்களை விளக்குவார்

03. i. இபாதத் என்பதன் கருத்தையும் அதன் பிரயோகத்தையும் முன்வைப்பார்

ii. தொழுகை இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகளுள் முதன்மையானது என்பதற்கான ஆதாரங்களை எடுத்துக்கூறுவார்

iii. நோன்பின் தாற்பரியங்களை அறிந்து கடைப்பிடிப்பார்


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/
Department of Examinations - Sri Lanka

04.i. ஆன்மீகத்தைமேம்பாடடையச் செய்யும் அம்சங்களை பின்பற்றி ஒழுகுவார்

ii. ஆன்மீகத்தைமேம்பாடடையச் செய்யும் அம்சங்களை பின்பற்றி ஒழுகுவார்

iii. ஒழுக்கப்பண்புகளை கடைப்பிடிப்பதன் முக்கியத்துவத்தை அறிந்து கூறுவார்

05.i. இஸ்லாமிய பொருளீட்டலின் வரையறைகளை அறிந்து ஒப்புவிப்பார்

ii. இஸ்லாம் பொருளியல் துறைக்கு வழிகாட்டும் பங்கை விளக்கிக் கூறுவார்.

iii. நபிமார்கள் விவசாயம், கைத்தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர் என்பதை அறிவார்

06.i. திருமணத்தின் முக்கியத்துவத்தையும் சிறப்பையும் ஆதாரங்களுடன் விளக்கிக் கூறுவார்.

ii. இளமைப்பருவத்தில் ஆற்றவேண்டிய பணிகளை அறிந்து அதன்படி ஒழுகுவார்

iii. இஸ்லாத்தில் நடுநிலை பேணுவது தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ள போதனைகளை ஏற்று முன்வைப்பார்

7. i. குடும்ப வாழ்வுக்கான இஸ்லாமிய நோக்கங்களை அறிந்து செயற்படுவார்

ii. உமர் ( ரழி ) அவர்கள் கலீபாவாக நியமிக்கப்பட்ட முறையினையும் அவர் கிலாபத்திற்கு செய்த சேவையினையும் முன்வைப்பர்.

iii. இலங்கையில் இஸ்லாம் அறிமுகமான பின்னணியை ஆதாரங்களுடன் முன்வைப்பார்.

iv. நபியவர்களின் தஃவா முறையினை விளக்கிக் கூறுவார்.

Department of Examinations - Sri Lanka


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

## பகுதி II

1. **சுருக்கமான விடை எழுதுக.**

i. **இஸ்லாமிய அகீதாவுக்கு அடிப்படையாக அமைந்துள்ள இரண்டு மூலாதாரங்களையும் குறிப்பிடுக.**

- அல் – குர் ஆன்
- அஸ்–ஸுன்னா (அல் – ஹதீஸ்)

(02 புள்ளிகள்)

ii. **இன்ஜீல், ஸபூர் ஆகிய வேதங்கள் அருளப்பட்ட இரு நபிமார்களின் பெயர்களைக் குறிப்பிடுக.**

- ஈஸா (அலை)
- தாவூத் (அலை)

(02 புள்ளிகள்)

iii. **இஸ்லாமிய சட்ட அறிஞர்கள் வகைப்படுத்திய தண்ணீரின் பிரதான வகைகளுள் இரண்டைக் குறிப்பிட்டு, ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் உதாரணம் தருக.**

- அல்மாஉத் தஹூர் – மிகச் சுத்தமான நீர்
  (உ+ம்) கடல் நீர், ஆற்று நீர், குழாய் நீர்

- அல்மாஉத் தாஹிர் – சுத்தமான நீர்
  (உ+ ம்) தேனீர், பன்னீர், மென்பானங்கள்

- அல்மாஉல் முதனஜ்ஜிஸ் – அசுத்தமான நீர்
  (உ + ம்) சாக்கடை நீர், மதுபானம், சிறுநீர்

இரண்டு வகைகளுக்கு 1 புள்ளி, இரண்டு உதாரணங்களுக்கு 1 புள்ளி (மொத்தம் 1+1=2 புள்ளிகள்)

(02 புள்ளிகள்)

iv. **இஜ்மாவின் வகைகளுள் இரண்டை அவற்றின் பொருளுடன் குறிப்பிடுக.**

- இஜ்மாஉஸ் ஸரீஹ் – தெளிவான இஜ்மாஉ

- இஜ்மாஉஸ் ஸுகூதி – மௌனம் சார்ந்த இஜ்மாஉ

- இஜ்மாஉல் அக்ஸரிய்யா – பெரும்பான்மை இஜ்மாஉ

(இரண்டு வகைகள் பொருளுடன் குறிப்பிடப்பட்டிருப்பின் 2 புள்ளிகள்)

Department of Examinations - Sri Lanka


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

v. **ஸகாத் பெறத் தகுதியானோரில் பகீர், மிஸ்கீன் ஆகியோரை வேறுபடுத்திக் காட்டுக.**

- பகீர் : எவ்வித வருவாயும் அற்ற பரம ஏழை
- மிஸ்கீன் : தனக்கும் தனது பராமரிப்பில் உள்ளவர்களுக்கும் போதுமான அளவு செலவு செய்யக்கூடிய வருமானம் அற்றவர்.

(02 புள்ளிகள்)

vi. **'ஸீறா' என்ற பதத்தின் மூலம் புரிந்துகொள்ளப்படுவது யாது?**

- ஸீறா : முஹம்மத் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு

(02 புள்ளிகள்)

vii. **'அகீகா', 'உழ்ஹியா' என்பவற்றை வரைவிலக்கணப்படுத்துக.**

- அகீகா : குழந்தை பிறந்ததற்காக கொடுக்கப்படும் குர்பான்
- உழ்ஹிய்யா : துல்ஹஜ் 10 - 13 வரையான காலப்பகுதியில் கொடுக்கப்படும் குர்பான்

(02 புள்ளிகள்)

viii. **"ஒரு கத்ரிலிருந்து இன்னொரு கத்ரை நோக்கி நகர்ந்து செல்கிறேன்" எனக் குறிப்பிடப்பட்ட ஸஹாபி யார்?**

- உமர் (ரழி) அவர்கள்

(02 புள்ளிகள்)

ix. **மஸ்ஜிதுன் நபவியின் சிறப்புக்கள் இரண்டு தருக.**

- புனித யாத்திரை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்ட (மூன்று) தலங்களில் ஒன்று
- இங்கு நிறைவேற்றப்படும் ஒரு தொழுகை ஆயிரம் (1000) தொழுகைகளுக்குச் சமனானது
  (இவை போன்ற இரண்டு கருத்துக்கள் குறிப்பிடப்பட்டிருப்பின் 2 புள்ளிகள்)

x. **இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல் (ரஹ்) அவர்களின் இஸ்லாமிய தீர்ப்புக்கள் தொடர்பான நூலின் பெயரைக் குறிப்பிடுக.**

- முஸ்னத் அஹ்மத்
- கிதாப் அல்-மஸாஇல் (இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல்)
  (இவற்றுள் ஒன்று குறிப்பிடப்பட்டிருப்பின் 2 புள்ளிகள்)

**(மொத்தம் 2 x 10= 20 புள்ளிகள்)**

Department of Examinations - Sri Lanka


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

2.

i. **'மு∴ஜிஸாதுல் குர்அன்' என்றால் என்ன?**

- அல்குர் ஆனின் அற்புதங்கள்

(02 புள்ளிகள்)

ii. **அல் - குர்ஆன், இஸ்லாமியச் சட்டத்தின் பிரதான மூலாதாரம் என்பதற்கான நியாயங்களுள் மூன்றைக் குறிப்பிடுக.**

- அல்குர்ஆன் அல்லாஹ்வினால் அருளப்பட்டது.
- சட்டத்தை நேரடியாக வழங்குகின்றது
- இது முழு மனித சமூகத்திற்குமான வழிகாட்டி
- எந்தவித மாற்றத்திற்கும் உட்படாதது
- அல்குர் ஆனை பாதுகாக்கும் பொறுப்பை அல்லாஹ் ஏற்றுக்கொண்டுள்ளமை
- வாழ்வின் எல்லாத் துறைகளுக்கும் வழிகாட்டக்கூடியது

(இவை போன்ற 3 கருத்துக்கள் குறிப்பிடப்பட்டிருப்பின் 3 புள்ளிகள்)

iii. **அல் - குர் ஆனைப் பாதுகாப்பதில் கலீபா உஸ்மான் (ரழி) அவர்களின் பங்களிப்புக்கள் ஐந்தினைச் சுருக்கமாக விளக்குக.**

- ஆர்மேனியா, அஸர்பைஜான் பகுதியில் ஈராக், சிரியா வீரர்கள் அல்குர்ஆனை ஓதும் முறையில் முரண்பட்டுக்கொண்ட விடயத்தை ஹுதைபதுல் யமானி அவர்கள் கலீபா உஸ்மான் ( ரழி ) அவர்களிடம் முறையிட்டதைத் தொடர்ந்து, கலீபா அவர்கள் அல்குர் ஆனை பாதுகாப்பதற்கு பின்வரும் நடவடிக்கைகளை எடுத்தார்.
- இந்தப் பணிக்காக ஸைய்த் இப்னு ஸாபித் ( ரழி ) அவர்களின் தலைமையில் ஒரு குழுவை நியமித்தமை
- ஹப்ஸா (ரழி) அவர்களிடமிருந்த மூலப்பிரதியை எடுத்து பல பிரதிகள் தயாரித்தமை
- குறைஷியர்களின் மொழிவழக்கை பின்பற்றியமை
- அவற்றை பல மாகாணங்களுக்கும் காரிகளுடன் அனுப்பியமை
- எதிர்கால முரண்பாடுகளை தவிர்ப்பதற்காக முன்னைய பிரதிகளை எரித்துவிட பணித்தமை
- அல்குர்ஆனை ஒரே முறையில் ஓத வழிவகுத்து முஸ்லிம்களை ஒன்றிணைத்தமை ( ஜாமிஉல் குர்ஆன்)

(இவை போன்ற 5 கருத்துக்கள் குறிப்பிடப்பட்டிருப்பின் 5 புள்ளிகள்)

(மொத்தம் 2+ 3+ 5 = 10 புள்ளிகள்


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

3.

i. **'இபாதத்' என்பதனை வரைவிலக்கணப்படுத்துக.**

- வணங்குதல், வழிபடுதல், கீழ்படிதல் என்பது கருத்தாகும்.

- அல்லாஹ் எமக்கு ஏவியவற்றை எடுத்து நடப்பதனூடகவும், தடுத்தவற்றை விலகி நடப்பதன் ஊடாகவும் அல்லாஹ்வுக்கு கீழ்படிந்து நடப்பதாகும்

- அல்லாஹ்வின் மீது கொண்ட உச்ச அன்புடன் கூடிய பூரண கட்டுப்பாடு

  (வரைவிலக்கணப்படுத்தப்பட்டிருப்பின் 2 புள்ளிகள்)

ii. **தொழுகையைத் தவற விடுபவனை நபி (ஸல்) அவர்கள் எச்சரித்துக் கூறிய மூன்று கருத்துக்களைத் தருக.**

- யார் ஒரு வேளை தொழுகையை தவறவிடுகின்றாரோ அவர், தன் குடும்பம், சொத்து என்பவற்றை தொலைத்து விட்டு நிற்கும் தனி மனிதனை போலாவார். (இப்னு ஹிப்பான்)

- தொழுகையை விட்டுவிடுவது குப்ருக்கு இட்டுச் செல்லும்.

- தொழுகையை தவற விடுபவர் அல்லாஹ்வின் கோபத்திற்கு உள்ளாகுவார்.

- மறுமையில் விசாரிக்கப்படும் முதல் கேள்வி தொழுகை பற்றியதாகும்.

- சுவனம் கிட்டாமல் போதல்.

- பிர்அவ்ன், ஹாமான், நும்ரூத், உபை இப்னு கலப் போன்றவர்களுடன் மறுமையில் எழுப்பப் படுவார் (அஹ்மத்)

  (இவை போன்ற 3 கருத்துக்கள் குறிப்பிடப்பட்டிருப்பின் 3 புள்ளிகள்)

Department of Examinations - Sri Lanka

iii. **பர்ளான நோன்புக்கு இஸ்லாம் வழங்கியுள்ள முக்கியத்துவங்கள் ஐந்தினைச் சுருக்கமாக விளக்குக.**

- நோன்பு ஒரு கட்டாயக் கடமை (பர்ளு ஐன்)

- இறை அச்சத்தை (தக்வா) ஏற்படுத்தக்கூடியது.

- மறுமையில் மன்றாடக்கூடியது.

- பாவங்களுக்கு மன்னிப்பையும் பரிகாரத்தையும் பெற்றுத்தரக்கூடியது.

- "நோன்பு எனக்குரியது அதற்கு நானே கூலி வழங்குகிறேன்" என அல்லாஹ் சிறப்பித்துள்ளான்.

- பன்மடங்கான கூலியை பெற்றுத்தரக்கூடியது

- சுவனத்தில் "ரய்யான்" எனும் விசேட வாயிலினூடாக சுவனம் புகும் வாய்பைத் தரக்கூடியது.

  (இவை போன்ற 5 கருத்துக்கள் சுருக்கமாக விளக்கப்பட்டிருப்பின் 5 புள்ளிகள்)

(மொத்தம் 2+ 3+ 5 = 10 புள்ளிகள்)


Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

4.

i. **ஸுஹ்த், ரஹ்பானியா என்பவற்றிகு இடையிலான வேறுபாட்டைக் குறிப்பிடுக.**

- ஸுஹ்த் : பற்றற்ற வாழ்வு (இஸ்லாம் வரவேற்கும் ஆன்மிக பண்புகளில் ஒன்று)

- ரஹ்பானியா : துறவறம் (உலக இன்பங்களை முற்றாக துறத்தல்) இதனை இஸ்லாம் தடுக்கின்றது.

(02 புள்ளிகள்)

ii. **தவ்பா ஏற்றுக்கொள்ளப்படத் தேவையான நிபந்தனைகள் மூன்றைத் தருக.**

- "அல்லாஹ்வுக்காக" என்ற கலப்பற்ற எண்ணத்துடன் பாவமன்னிப்பை வேண்டுதல்.

- பாவத்திலிருந்து முற்றாக நீங்குதல்.

- செய்த பாவத்திற்காக வருந்துதல்.

- குறித்த பாவத்தை இனிமேல் செய்வதில்லை என உறுதிகொள்ளல்.

- மனிதர்களுடன் தொடர்புடைய பாவமாக இருந்தால் குறித்த நபரிடம் மன்னிப்பை வேண்டுதல்.

(இவற்றுள் 3 கருத்துக்கள் குறிப்பிடப்பட்டிருப்பின் 3 புள்ளிகள்)

iii. **இஸ்லாம் போதிக்கும் நற்பண்புகள் ஐந்தினைக் குறிப்பிட்டு, அவை ஒவ்வொன்றுக்கும் நபி (ஸல்) அவர்களின் வாழ்விலிருந்து ஒவ்வோர் உதாரணம் தருக.**

- பொறுமை - துணிவு

- பணிவு - மன்னிப்பு

- அன்பு - தியாகம்

- ஈகை - நாணயம்

- புலன்களைப் பேணல்

(இவை போன்ற 5 நற்பண்புகள் எழுதப்பட்டிருப்பின் 2 1/2 புள்ளிகள், அவற்றுக்கான உதாரணங்கள் தரப்பட்டிருப்பின் 2 1/2 புள்ளிகள், மொத்தம் 5 புள்ளிகள்)

(மொத்தம் 2+ 3+ 5 = 10 புள்ளிகள்)

Department of Examinations - Sri Lanka



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

5.

i. **இஸ்லாமிய அடிப்படைகளைப் பேணி வியாபாரத்தில் ஈடுபடுவதனால் வாங்குவோனும் விற்போனும் அடையும் பொதுப் பயன்கள் இரண்டைக் குறிப்பிடுக.**

- இரு சாராரும் ஏமாற்றப்பட மாட்டார்கள்
- இரு சாராரும் திருப்தி அடைவர்
- அவர்களிடையிலான வியாபாரம் வணக்கமாக மாறும்
- இருவருக்குமிடையிலான உறவு பேணப்படும்
- வியாபாரம் ஸ்திரத்தன்மை அடையும்
- வீண் குற்றச்சாட்டுக்களிலிருந்து பாதுகாப்பு கிடைக்கும்

(இவை போன்ற 2 கருத்துக்கள் எழுதப்பட்டிருப்பின் 2 புள்ளிகள்)

ii. **இஸ்லாமிய பொருளாதார முறையின் சிறப்பம்சங்கள் மூன்றைச் சுருக்கமாக விபரிக்குக.**

- தெய்வீகத் தன்மைக் கொண்டது
- நெகிழும் மற்றும் நெகிழாத் தன்மை கொண்டது
- ஹராத்தை விட்டு தூரமானது
- எவருக்கும் அநீதி இழைக்காமை
- சமூக நலனுக்கும் தனிமனித நலனுக்குமிடையே இணக்கம் காணக்கூடியது.
- ஆன்மீக, லௌகீக பயன்களை ஒருங்கே கொண்டது.
- பொருளாதார ஏற்றத் தாழ்வுகளைச் சீர் செய்யக்கூடியது.

(இவை போன்ற 3 கருத்துக்கள் சுருக்கமாக விளக்கப்பட்டிருப்பின் 3 புள்ளிகள்)

iii. **வரலாற்றில் நபிமார்கள் கொண்டிருந்த தொழிற்றிறன்கள் ஐந்து பற்றிச் சுருக்கமாக விளக்குக.**

- ஆதம் (அலை) – விவசாயம், கால்நடை
- இத்ரீஸ் (அலை) – நெசவு
- ஸகரிய்யா (அலை) – தச்சு
- நூஹ் (அலை) – தச்சு
- தாவூத் (அலை) – இரும்புருக்கு
- முஹம்மத் (ஸல்) – கால்நடை, வணிகம்

(இவை போன்ற 5 கருத்துக்கள் சுருக்கமாக விளக்கப்பட்டிருப்பின் 5 புள்ளிகள்)

(மொத்தம் 2+ 3+ 5 = 10 புள்ளிகள்)


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/
Department of Examinations - Sri Lanka

6.

i. **இஸ்லாத்தின் பார்வையில் திருமணத்தின் நோக்கங்கள் இரண்டைக் குறிப்பிடுக.**

- ஸாலிஹான சந்ததி உருவாக்கம்
- உடல், உள அமைதியை ஏற்படுத்தல்
- சிறந்த சமூக கட்டமைப்பைத் தோற்றுவித்தல்
- ஒழுக்கம் பேணல்
- பாவங்களிலிருந்து பாதுகாப்புப் பெறல்

(இவற்றுள் 2 கருத்துக்கள் குறிப்பிடப்பட்டிருப்பின் 2 புள்ளிகள்)

ii. **இளமைப்பருவத்தினை அர்த்தமுள்ளதாக மாற்றுவதற்கு இஸ்லாம் குறிப்பிடும் வழிகாட்டல்களுள் மூன்றைத் தருக.**

- ஆன்மீக செயற்பாடுகளில் ஈடுபடுதல் (தொழுகைகள், திக்ர், திலாவதுல் குர்ஆன், தௌபா)
- நல்லவர்களுடனான உறவைப் பேணல்
- அல்லாஹ்வினதும் நபியவர்களினதும் வழிகாட்டல்களை பின்பற்றுதல்
- நல்ல நூல்களை வாசித்தல், மார்க்க விளக்க உரைகளை செவிமடுத்தல்
- போதை பொருட்பாவனையை முற்றாகத் தவிர்த்தல்
- இலட்சிய வேட்கை, நேர் சிந்தனை கொண்டவராக இருத்தல்
- போசாக்கான உணவு, உடற்பயிற்சி என்பவற்றைப் பேணல்
- தொடர்பூடகங்களை முறையாகக் கையாள்தல்
- அஜ்னபி – மஹ்ரமி உறவுகளைப் பேணி நடத்தல்

(இவை போன்ற 3 கருத்துக்கள் குறிப்பிடப்பட்டிருப்பின் 3 புள்ளிகள்)

Department of Examinations - Sri Lanka


Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

iii. **வாழ்வில் நடுநிலை பேணல் (வஸதிய்யா) தொடர்பாக இஸ்லாம் முன்வைத்துள்ள ஐந்து வழிமுறைகளைத் தெளிவுபடுத்துக.**

- செலவு செய்வதில் ஊதாரியாகவோ உலோபியாகவோ இல்லாதிருத்தல்
- ஆன்மீக செயற்பாடுகளில் கடும் போக்கை தளர்த்திக்கொள்ளல்
- உலக வாழ்வு மறுமை வாழ்வு என்பவற்றுக்கிடையே சமநிலை பேணல்
- ஹுகூகுல்லாஹ் – ஹுகூகுல் இபாத் என்பவற்றுக்கிடையே சமநிலை பேணல்
- உணவு, உடை, நடை, பாவனையில் சமநிலை பேணல்
- நடுநிலை பேணல் என்பது கடும் போக்கு- பொடுபோக்கு ஆகிய இரண்டும் அல்ல என்பதை புரிந்துகொள்ளல்

(இவை போன்ற 5 வழிமுறைகள் தெளிவுபடுத்தப்பட்டிருப்பின் 5 புள்ளிகள்)

(மொத்தம் 2+ 3+ 5 = 10 புள்ளிகள்)

Department of Examinations - Sri Lanka



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

7. **பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.**

i. **முன்மாதிரியான இஸ்லாமியக் குடும்பத்தின் பண்புகள்**

- முன்மாதிரி மிக்க குடும்பம், நிம்மதி, சந்தோசம், அமைதி என்பவற்றைக் கொண்டிருக்கும்
- சுவனத்தை இலக்காகக் கொண்டிருத்தல்
- ஒவ்வொருவரும் தமது பொறுப்புக்களையும், கடமைகளையும் செயற்படுத்தல்
- கணவன் மார்க்கப் பற்றுள்ளவராக இருந்து, மிருதுவான குணத்துடன் வழிகாட்டுதல்
- மனைவி இறைதிருப்தியை இலக்காகக் கொண்டு எப்போதும் கணவனுக்கு கீழ்படிந்து அவரை திருப்திப்படுத்தல்
- அயல் உறவுகளைப் பேணி நடத்தல்
- தனது குடும்பத்திற்கு எவ்வித அவப்பெயரும் வராமல் குடும்ப அங்கத்தவர்கள் பாதுகாத்துக் கொள்வார்கள்
- இரத்த பந்தங்களைப் பேணி நடத்தல்

(இவை போன்ற 5 கருத்துக்கள் விளக்கப்பட்டிருப்பின் 5 புள்ளிகள்)

Department of Examinations - Sri Lanka

ii. **கலீபா என்ற வகையில் உமர் (ரழி) அவர்களின் பணிகள்**

- உரோம, பாரசீக கொடுங்கோல் ஆட்சியில் இருந்து மக்களை விடுவித்தமை.
- சிரேஷ்ட அலுவலர்களை கவர்னர்களாக நியமித்து, நிர்வாக கட்டமைப்பை வலுப்படுத்தியமை.
- நீதித்துறையை சுயாதீனமாக செயற்படுத்தியமை.
- நிருவாக அலகுகளை ஏற்படுத்தியமை.
- பைத்துல் மால் உருவாக்கம்.
- ஒழுங்கமைக்கப்பட்ட இராணுவம் உருவாக்கப்பட்டமை.
- நகர நிர்மாணம், சுகாதார சேவைகள், நீர்ப்பாசன வசதிகள் மேற்கொள்ளப்பட்டமை.
- ஹிஜ்ரி நாளேடு (கலண்டர்) அறிமுகம் செய்யப்பட்டமை.
- இஸ்லாமிய வரலாற்றில் தனித்துவமான நாணயம் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டமை.

(இவை போன்ற 5 கருத்துக்கள் விளக்கப்பட்டிருப்பின் 5 புள்ளிகள்)


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

iii. **இலங்கையில் இஸ்லாம் அறிமுகமாகிய வரலாறு**

- இஸ்லாத்திற்கு முன்பிருந்தே இடம் பெற்று வந்த அரபு வர்த்தகர்களின் வருகையைத் தொடர்ந்து இஸ்லாம் இலங்கைக்கு அறிமுகமாதல்.
- வஹப் இப்னு அபூ ஹப்ஸா (ரழி) வருகையுடன் தொடர்பான சம்பவம்.
- உமர் ( ரழி ) அவர்களின் காலத்தில் இலங்கைக்கு இஸ்லாம் அறிமுகமானது பற்றிய இப்னு ஸஹ்ரயாரின் குறிப்பு.
- ஹஜ்ஜாஜின் கொடுமைக்கு அஞ்சி பனூ ஹாஷிம்கள் இலங்கையில் குடியேறியமை தொடர்பாக சேர் ஜேம்ஸ் எமர்சன் டெனண்ட் (சிலோன்) இன் குறிப்பு.
- அரேபிய வர்த்தகர்கள் சிலரின் விதவை மனைவிகளையும், அநாதை பிள்ளைகளையும் ஏற்றிச்சென்ற கப்பல் தேபல் துறைமுகத்தில் கொள்ளைக்காரர்களால் சிறைபிடிக்கப்படல், அதனை மீட்க ஹஜ்ஜாஜ் இப்னு யூசுப் அவர்களின் நடவடிக்கை தொடர்பான சம்பவம். (அல்பலதூரி)
- ஹாலித் இப்னு பகாயாவின் வருகை.

(இவை போன்ற 5 கருத்துக்கள் விளக்கப்பட்டிருப்பின் 5 புள்ளிகள்)

iv. **நபி (ஸல்) அவர்களின் மக்கா கால இஸ்லாமிய அழைப்புப் பணி**

- சூரதுல் முத்தஸ்ஸிரின் முதல் ஏழு வசனங்கள் அருளப்பட்டதைத் தொடர்ந்து நபியவர்களின் பிரச்சாரப்பணி ஆரம்பமானது.
- ஆரம்பத்தில் குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள் என்போருக்கு இஸ்லாம் அறிமுகம் செய்யப்பட்டது.
- முதல் மூன்று வருடங்கள் இரகசியப்பிரச்சாரம் தாருல் அர்கமில் இடம்பெற்றது.
- இஸ்லாத்தின் அடிப்படை நம்பிக்கை, நல்லொழுக்க விடயங்களை மக்கள் மத்தியில் வலியுறுத்தியமை.
- பகிரங்கப் பிரச்சாரம் ஸபா மலை அடிவாரத்தில் ஆரம்பிக்கப்பட்டது.
- அதனைத் தொடர்ந்து பல சவால்களுக்கும், எதிர்ப்புக்களுக்கும், துன்புறுத்தல்களுக்கும் முகம் கொடுத்தமை.
- சவால்களை பொறுமையுடன் எதிர்கொண்டமை.
- நுபுவ்வத் 5ஆம், 7ஆம் வருடங்களில் அபீசீனியா ஹிஜ்ரத் மேற்கொள்ளப்பட்டது.
- அகபா 1, அகபா 2 உடன்படிக்கைகள் இடம்பெறல்

(இவை போன்ற 5 கருத்துக்கள் விளக்கப்பட்டிருப்பின் 5 புள்ளிகள்)

(5 + 5 = 10 புள்ளிகள்)

❋ ❋ ❋

Department of Examinations - Sri Lanka



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/